தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-6-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் இளநிலை பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வு துவங்கியது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப்படிப்புகளுக்கான முதற்கட்ட கலந்தாய்வு இன்று (29-6-2015) காலை 9.00 மணியளவில் பல்கலைக்கழக வளாக அண்ணா அரங்கத்தில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் முன்னிலையில், முதன்மையர் (வேளாண்மை) முனைவர். ச. மகிமைராஜா அவர்கள் தலைமையில் கலந்தாய்வு துவங்கியது.

199 கட்-ஆப் மதிப்பெண்கள் பெற்று செல்வன். சிவலோகேஷ் முதல் மாணவராக தேர்வு செய்யப்பட்டார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். கு.ரா. ஆனந்தகுமார் அவர்கள் செல்வன். சிவலோகேஷ் -க்கு சேர்க்கைக்ககான உறுதி விண்ணப்ப படிவத்தை வழங்கி பாராட்டினார். செல்வன். சிவலோகேஷ் இளநிலை வேளாண் அறிவியலை (B.Sc. Agriculture) தெரிவு செய்தார்.

இரண்டாவதாக, 198.75 கட்-ஆப் மதிப்பெண்கள் பெற்ற செல்வி. உமா அவர்களுக்கு சேர்க்கைக்கான விண்ணப்ப உறுதிப் படிவம் வழங்கப்பட்டது. செல்வி. உமா, பி.டெக் (B.Tech Food Processing Engineering) உணவு பதப்படுத்தல் துறையை தெரிவு செய்தார்.

மூன்றாவதாக, 198.25 கட்-ஆப் மதிப்பெண்கள் பெற்ற செல்வி. சௌமியா, இளநிலை வேளாண் அறிவியல் (B.Sc. Agriculture) பட்டப்படிப்பை தெரிவு செய்தார்.

இன்றைய கலந்தாய்வில் 199.25 முதல் 197 கட்-ஆப் வரையிலான மதிப்பெண்களுக்கான கலந்தாய்வு நடைபெற்றது. கலந்தாய்வுக்கு, 236 மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். முதற்கட்ட கலந்தாய்வானது இன்று (29-6-2015) தொடங்கி 7-6-2015 வரை நடைபெறுகிறது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


TAMIL NADU AGRICULTURAL UNIVER
2015


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
UNDERGRADUATE ADMISSIONS 2015
COUNSELLING
9 JUNE - 07 JULY 2015